செ.கு.எண் 250 நாள்:- 10.12.11

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 10 .12.2011

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், பெரியபேட்டை ராமையன் தோப்பு பகுதியில் **9.12.2011** அன்று மின் கம்பி திரு. அன்பு என்பவரின் கூரை வீட்டின் மீது விழுந்து வீடு தீப்பிடித்து எரிந்ததை அணைக்க முற்பட்டபோது அவருடைய மனைவி திருமதி குட்டியம்மாள் (எ) கிருஷ்ணவேணி மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியும்;

இன்று ( **10.12.2011**) வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், தாராபடவேடு கிராமம், குமரப்ப நகர் **3**-வது தெருவைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மனைவி திருமதி. முனியம்மாள் பஞ்சாயத்திற்கு சொந்தமான நீர்தொட்டியில் நீர் நிரப்புவதற்காக, மின்மோட்டார் சுவிட்சை போடும் பொழுது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயறுற்றேன்.

இவ்விரு விபத்துகளில் மரணமடைந்த திருமதி. குட்டியம்மாள் (எ) கிருஷ்ணவேணி மற்றும் முனியம்மாள் ஆகியோர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்